தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
எண்.100 அண்ணா சாலை , கிண்டி, சென்னை-600032
தொலைபேசி:044-22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை-600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண். 0005/2016

ஆணை எண். 74/2016

நாள்: 21/ 04 /2016

திரு.விக்னேஷ்
தலைவர், வகுரம்பட்டி நலச் சங்கம்
நாமக்கல்.

மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
நாமக்கல் நகராட்சி.

எதிர் மனுதாரர்

வகுரம்பட்டி மக்கள் நலச் சங்கத்தின் சார்பிலான 30.12.2015 நாளிட்ட முறையீடு இம்முறைமன்ற நடுவத்தில் 04.01.2016 அன்று பெறப்பட்டுள்ளது. மேற்படி முறையீடு குறித்து உரிய அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

# ஆணை

நாமக்கல் நகர் மன்றத்தின் 24.06.2009 நாளைய 99–ஆம் எண்ணிட்ட தீர்மானத்தின் படி நாமக்கல் நகராட்சிக்கு அருகாமையிலுள்ள நகர தன்மையும், வளர்ச்சியும் கொண்ட கிராமங்களை நகராட்சியுடன் இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்டபோது நாமக்கல் நகராட்சிக்கு அருகிலேயே உள்ள வகுரம்பட்டி ஊராட்சி சேர்க்கப்படாமல் விடுபட்டள்ளது முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 20.02.2012–ல் (தீர்மான எண்.188) வகுரம்பட்டியினை நகராட்சியுடன் இணைக்க மீண்டும் நகர்மன்றத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பல்வேறு கடித நகல்களும் இம்முறை மன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

2) வகுரம்பட்டி ஊராட்சி பொது மக்களின் அடிப்படை வசதிகளைக் கருத்தில் கொண்டு இவ்வூராட்சியை நாமக்கல் நகராட்சியுடன் இணைத்திட வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து நாமக்கல் நகராட்சி ஆணையரது அறிக்கை இம்முறை மன்ற நடுவத்தால் கோரி பெறப்பட்டது.

3) நாமக்கல் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.15933/2015/ஏப்ரல் நாள்.12.02.2016–ல் வகுரம்பட்டி ஊராட்சியினை நாமக்கல் நகராட்சியுடன் இணைக்க நகர்மன்றத் தலைவரால் பொருள் கொண்டுவரப்பட்டு 20.02.2015ஆம் தேதியில் நகர்மன்றத் தீர்மானம் (எண்.188) நிறைவேற்றப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது,

4) தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920–ன் பிரிவு 4–ன் படி நகரரட்சியினை அமைத்துருவாக்குதல் அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகும் . எனவே, மேற்படி கோரிக்கை மனுவின் நகல் மற்றும் நகராட்சி ஆணையரது அறிக்கையின் நகல் ஆகியவை பரிசீலனைக்காகவும் தக்க தொடர் நடவடிக்கைக்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் மனுதாரருக்கும் தக்க பதில் இம்முறை மன்ற நடுவத்தால் அனுப்பி வைக்கப்பட்டது. இம்முறை மன்ற நடுவத்தில் தொடர் நடவடிக்கை ஏதுமில்லை.

5) எனவே, இப்பொருள் குறித்து கண்காணித்து தக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நாமக்கல் நகராட்சி ஆணையர், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையிடப்படுகிறது.

இன்று ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

22.4.16
செயலாளருக்காக

பெறுநர்.
1. நகராட்சி ஆணையர்,
   நாமக்கல் நகராட்சி.

2. மாவட்ட ஆட்சித் தலைவர் /
   மாவட்ட தேர்தல் அலுவலர்,
   நாமக்கல்.

நகல்.
திரு.விக்னேஷ் ,
தலைவர் வகுரம்பட்டி மக்கள் நலச் சங்கம்,
6/913, நேதாஜி நகர், 4வது தெரு,
நாமக்கல்–637 001.